பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 29 சனிக்கிழமை 15.11.2025 கதிர் 007

## இனி இது ரகசியம் அல்ல!

தெற்கில் உள்ள உள்ளாட்சி சபைகளில் ஆளும் என்பிபியின் வரவு செலவுத் திட்டங்கள் தொடர்ந்து தோற்கடிக்கப்பட்டு வருகின்றன. தொங்கு சபைகள் அமைந்த ☞ 2

# எதிர்க் கட்சித் தலைவரின் ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது

### பேசிக்கொண்டிருக்கும் போது நாடாளுமன்றத்தில் நேற்றுச் சம்பவம்

பெருந்தோட்டத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களினது சம்பள அதிகரிப்பை மேற்கொண்டமைக்காக ஆளும்தரப்பிற்கு நன்றி தெரிவிக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு -செலவு திட்டத்தில் அரசுத் தலைவர் அநுரகுமார தோட்டத் தொழிலாளர்களுக்கு இவதுவரை வழங்கப்பட்டுவந்த 1,350 ரூபா சம்பளத்துக்கு மேலதிகமாக 400 ரூபா வழங்க எடுத்திருக்கும் பிரேரணையை வரவேற்பதுடன் அதற்காக அரசுத் தலைவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

அரசுத் தலைவரின் கூற்றுப்படி முதலாளிமார் களிடமிருந்து 200 ரூபாவும் ஆளும்தரப்பிடமிருந்து 200 ரூபாவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதற்கு எமது நன்றியைத் தெரிவிக்கிறேன்- என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் விசேட கூற்றொன்றை முன்வைத்து இந்த விடயத்தை தெரிவிக்க முற்படும்போது, சபைக்குத் தலைமை தாங்கிய சபாநாயகர், அவருக்கு அதற்காக 2நிமிடங்கள் மாத்திரம் வழங்கப்படும் ☞ 2

# 2026 வரவு – செலவுத் திட்ட 2ஆம் வாசிப்பு நிறைவேற்றம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 118 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 160 வாக்குகளும் எதிராக 42 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 118 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கடந்த 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைத்து 4 மணித்தியாலங்களும் 15 நிமிடங்களும் உரை நிகழ்த்தினார்.

இந்நிலையில் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 8 ஆம் திகதி தொடங்கி நேற்று வெள்ளிக்கிழமை வரையான 6 நாட்கள் தொடர்ந்து இடம்பெற்ற நிலையில், நேற்று மாலை 6,15மணியளவில் விவாதம் முடிவுக்கு வந்தபோது, சபைக்கு தலைமைதாங்கிய சபாநாயகர் வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பை சபை அனுமதிக்கிறதா என கேட்டபோது, ☞ 2

# தமிழரின் பிரச்சினை தொடர்பில் அடுத்த வாரம் அநுரவுடன் பேச்சு

### நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. அறிவிப்பு



**தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அரசுத்தலைவர்அநுரகுமாரஇணக்கம் தெரிவித்துள்ளார். அடுத்த வாரத்தில் எமது கட்சியுடன் பேசுவதற்கு எமக்கு நேரமொன்றை வழங்கியுள்ளார். அரசுத் தலைவர் மீது நம்பிக்கை வைத்து வரவு, செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருக்க தீர்மானித்துள்ளோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**2026ஆம்ஆண்டுக்கானவரவுசெலவுத் திட்டத்தைஅவதானிக்கையில்,அதில்** ☞ 2

### சோதனையின்றி விடுவிக்கப்பட்ட

# சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்களில் ஆயுதங்களே இருந்தன; விசாரிக்குக

### அருச்சுனா எம்.பி. தெரிவிப்பு

எவ்வித பரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்களுக்குள்ளும் ஆயுதங்களே இருந்தன என்பதை மீண்டும் நான் பொறுப்புடன் கூறுகின்றேன். அது தொடர்பான முக்கிய ஆவணங்கள் எனக்கு கிடைத்துள்ளன. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கோ அல்லது இன்டர்போலுக்கோ இந்த விடயத்தைக் கொண்டு சென்று விசாரியுங்கள் நான் பதிலளிக்கின்றேன் என்று யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினரான அருச்சுனா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வின்போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 6

# ரூ. 200 சம்பள அதிகரிப்பு நிச்சயம் பாதுகாப்பு அமைச்சர் திட்டவட்டம்

அரச நிதியை மோசடி செய்து நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பளம் வழங்குவதை எதிர்க்கிறார்கள். வழங்கிய வாக்குறுதிக்கு அமைய 200 ரூபா சம்பளத்தை வங்குவோம் என்று பெருந்தோட்ட மக்களுக்கு உறுதியளிக்கிறோம் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ☞ 6

# பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட முதலாளிகளாக்குங்கள்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

பெருந்தோட்ட சமூகத்தினருக்கு, இந்த 400 ரூபா சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள எடுத்த தீர்மானம் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இந்த தொகையை மேலும் அதிகரிக்க வேண்டும். பெருந்தோட்டத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுப்பது போலவே, அவர்களை சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களாகவும் வலுப்படுத்துங்களென எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுத்தார்.

பெருந்தோட்ட சமூகத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்ற முற்பட்ட சமயம், சபாநாயகர் அதற்கு இடமளிக்காமையால் நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய சஜித் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களினது தற்போதைய 1350 ரூபா சம்பளத்துடன். 400 ரூபா ☞ 2

# கொட்டாஞ்சேனை சூட்டு சம்பவத்தில் மேலும் இருவர் பொலிஸாரால் கைது

கொட்டாஞ்சேனை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பிரதான துப்பாக்கிதாரி வருகைத் தந்திருந்த காரை செலுத்திய சாரதி மற்றும் குற்றச் செயலுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 16 ஆம் ஒழுங்கை பகுதியில் நவம்பர் ☞ 2

# வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு வரவு–செலவுத் திட்டத்தில் தீர்வு இல்லை

### மரிக்கார் எம்.பி. கொதிப்பு

பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பள அதிகரிப்பை நாங்கள் எதிர்க்கவில்லை. பெருந்தோட்ட தமிழர்களுக்கும், வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கும் வரலாற்று காலம் முதல் இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தீர்வேதும் முன்வைக்கப்படவில்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இடங்களில் எல்லாம் எதிர்க் கட்சிகள் தமது ஒட்டுமொத்த ஆதரவையும் திரட்டி ஆளும் தரப்பைத் தோற்கடித்து வருகின்றன. இது சிங்கள மக்கள் மத்தியில் என்பிபி ஆளும் தரப்புக்கு இருந்த செல்வாக்கு வீழ்ச்சியின் அறிகுறி என்று கூறப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தியால் (ஹிஊணஊண) நிர்வகிக்கப்படும் நாவுல பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு வரைவு தோற்கடிக்கப்பட்டுள்ளது.

முடிவுகளின்படி, பாதீட்டு வரைவுக்கு ஆதரவாக 8 வாக்குகளும் எதிராக 9 வாக்குகளும் கிடைத்தன.

இந்தப் பிரதேச சபையில் 18 உறுப்பினர்கள் உள்ளனர். ஆளும் என்பிபிக்கு 9 உறுப்பினர்களும் எதிர்க்கட்சிகள் அனைத்துக்குமாக 9 உறுப்பினர்களும் உள்ளனர். இருப்பினும் எதிர்த் தரப்பில் உள்ள ஒருவரின் ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்திருந்தது என்பிபி. ஆனால், நேற்று எதிர்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடித்திருந்தன.

இதேபோன்று, பதியத்தலாவை பிரதேச சபையில் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பிலும் என்பிபியின் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர் அநுர ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 8 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் கிடைத்தன. பதியத்தலாவை பிரதேச சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 20.

தன்மல்விலவிலும் ஆளும்தரப்பு நூலிழையில் தப்பிக்கொண்டது. தனமல்வில பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் தொடக்கத்தில் சமநிலையில் முடிந்தது, ஆதரவாக 17 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் கிடைத்தன.

இதனால் சபைத் தவிசாளர் தனது வாக்கை ஆதரவாக வழங்கி அதனை வெற்றிபெற வைத்தார். இதன் மூலம் தேசிய மக்கள் சக்தி தனமல்வில பிரதேச சபையில் வரவு-செலவுத் திட்டத்தைப் பாதுகாத்துக்கொண்டது.

பிரதேச சபைகளில் வரவு செலவுத் திட்டங்களை இப்போது தோற்கடிப்பதன் மூலம் சபைகளில் பெரிய மாற்றங்கள் எதுவும் வரப்போவதில்லை. வரவு செலவுத் திட்டங்கள் நிறைவேறினால் என்ன விட்டால் என்ன இரண்டு வருடங்களுக்கு அந்தச் சபைகள் தொடர்ந்தும் இயங்கும். வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்ட பிரதேச சபைகளின் தவிசாளர்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தப் பாதீடுகளை அனுமதிக்க முடியும்.

ஆனால், ஆளும்தரப்பின் பாதீடுகள் இப்படித் தோற்கடிக்கப்பட்டு வருவது மக்கள் மத்தியில் அதன் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து வருவதற்கும் எதிர்க் கட்சிகள் மத்தியில் ஒருங்கிணைப்பும் ஆளும்தரப்புக்கு எதிரான போக்கும் அதிகரித்து வருவதற்கும் சான்றாக அமைகின்றது என்று கருதப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள யோசனைகளில் 65 வீதமானவை பொருளாதார ரீதியலானவை என்றும் சமூக நலன்புரிகள் தொடர்பில் குறைவாகவே இருப்பதாக பல்வேறு நிறுவனங்கள் கூறியுள்ளன. இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பில் நாங்கள் கூறுவதாயின்,

தமிழ் மக்களின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியானது தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அடிப்படையாகக்கொண்டு இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும். சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும். தமிழ் மக்களின் அபிலாசைகள் பூர்த்தியாக வேண்டும் என்ற விடயங்களுக்காகவே உருவானது. நாடாளுமன்றத்தில் மூன்றாவது பிரதான கட்சியாக உள்ளது. எமது கட்சிக்கு மக்கள் வாக்களிக்கும்போது தமிழ் மக்களின் இருப்புக்காகவும், அரசியல் நலனுக்காகவும் மற்றும் அரசியல் தீர்வுக்காகவுமே வாக்களிப்பார்கள்.

இந்த கார்த்திகை மாதத்தில் வடக்கு மற்றும் கிழக்கு முழுவதும் வீரமறவர்களுக்காக அஞ்சலி செலுத்தப்படுகின்றது. ஆயிரக்கணக்கான போராளிகள் இனத்தின் விடுதலைக்காக போராடினர். அவர்கள் மண்ணில் விதைக்கப்பட்டனர். அவர்களை நினைவுகூரும் மாதமாகும் இது. இந்த மாதத்தில் நாங்கள் பிரதானமான தமிழ் கட்சியான இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு எமது மக்களின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆயுதமேந்திப் போராடி எத்தனையோ இழப்புகளை சந்தித்த இனத்திற்காக கொக்கிளாயில் பாலத்திற்காக ஆய்வு செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் இரண்டு பாலங்களை நிர்மாணிக்க ஆய்வு செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் ஆளும்தரப்பை ஆதரிக்க வேண்டும், ஆளும்தரப்புடன் இணைந்து பயணிக்கவேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி நினைக்க முடியாது. பல்லாயிரக்கணக்கான உயிர்களைத் தியாகம் செய்தது இந்தப் பாலங்களிற்காக அல்ல.

சமத்துவம் தொடர்பில் மாத்திரம் கூறிக்கொண்டிருக்கமுடியாது. சகலருக்கும் அரசியல் உரிமை இருக்க வேண்டும். வரவு செலவுத் திட்டத்தை பார்க்கும்போது அதனை அவதானிக்க முடியவில்லை. வடக்கு, கிழக்கிற்கான நிதி ஒதுக்கீட்டை பார்த்தால் புரிந்துகொள்ள முடியும். மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இன்றி ஆளுநர் வசம் இருக்கின்றன. நீங்கள் அரசமைப்பு ஊடாக நீண்டகால தீர்வுத் திட்டத்திற்கு வருவதாக இருந்தால் அதுவரைக்குமான மாகாண சபைகளை நடத்திச்செல்லலாம். ஏன் அதற்கான தேர்தலை நடத்தாமல் இருக்கவேண்டும்?

இதேவேளை கால்நடைக்களுக்கான ஒதுக்கீடுகள் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. 4.2 பில்லியன் கால்நடை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு மற்றும் கிழக்கில் மேய்ச்சல் தரைகளை மகாவலி அதிகார சபை ஊடாக வேறு இனத்தவர்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கின்றனர். காணி தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

ஆளும்தரப்பின்; நல்ல விடயங்களுக்கு எமது ஒத்துழைப்பு இருக்கும் என்பதனைக் கூறியுள்ளோம். போதைப்பொருள் ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு ஆதவளிக்கின்றோம். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலம் அமைக்க ஆய்வு செய்கின்றது என்பதற்காக வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்க முடியாது. எம்மிடம் 159 இருக்கைகள் உள்ளன, அதனால் எமக்கு தமிழ் அரசுக் கட்சி ஆதரவு அவசியமில்லை என்று ஆளும் கட்சியினர் கூறலாம். ஆனால் இது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாகும் என்பதுடன், கடந்த 70 வருடங்களுக்கும் மேலாக நாடாளுமன்றத்தில் இருக்கும் கட்சியாகவும் இருக்கின்றது. இதனால் இந்த நாடாளுமன்றத்தில் நாங்கள் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாகவும் வரவு செலவுத் திட்டம் தொடர்பான வாக்கெடுப்பு பயன்படுத்தப்படும்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான விடயம் இருப்பதால் இந்த வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கமுடியாது என்று கூறலாம். இது வேடிக்கையானது. அப்படியென்றால் இதனை அந்த விடயத்தை மாத்திரம் உள்ளடக்கியே வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். 2,138 ரூபா வரையில் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியில் உள்ள தொழிற்சங்கங்கள் கூறின. எவ்வாறாயினும் நான்காயிரம் ரூபா வழங்கினாலும் எதிர்க்கட்சியினர் அதற்கு எதிர்ப்பு வெளியிடப் போவதில்லை. அந்த மக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும்.

இதேவேளை, நாங்கள் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான கட்சியாகும். இதனால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் வாக்களிப்பது தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்துள்ளோம். அரசுத் தலைவர் மீது இன்னும் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றோம். அடுத்த வாரத்தில் எமது கட்சியுடன் பேசுவதற்கு எமக்கு நேரமொன்றை வழங்கியுள்ளார். எமக்கு பேசுவதற்கு இன்னும் காலம் உள்ளது. நாங்கள் அரசுத் தலைவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். எமது கோரிக்கைகள் தொடர்பில் செவிசாய்ப்பார் என்று நம்பிக்கை கொள்கின்றோம் இதனால் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இருக்க தீர்மானித்தோம் என்றார்.

## நகைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பள அதிகரிப்பை நாங்கள் எதிர்க்கவில்லை. பெருந்தோட்டத் தமிழர்களுக்கும், வடக்குத் தமிழர்களுக்கும் வரலாற்று காலம் முதல் இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

அரசுத் தலைவர் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்கும்போது முன்னாள் அரசுத் தலைவர் ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் உரையாற்றுகிறாரா என்று எனக்குத் தோன்றியது. அரச நிறுவனங்களை மறுசீரமைக்க ஒருபோதும் இடமளிக்க போவதில்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தும் யோசனைகளை வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைத்துள்ளனர்.

ஜேவிபியின் உண்மை முகத்தை வெளிப்படுத்தியதையிட்டு அரசுத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அட்டைப்பூச்சி குருதியை உறிஞ்சிக் குடிப்பதை போன்று வரிகளை விதித்து திறைசேரி நிரம்பியுள்ளது. இதனைத் தவிர்த்து தேசிய உற்பத்திகள் அல்லது வெளிநாட்டு முதலீடுகளினால் திறைசேரியின் கையிறுப்பு அதிகரிக்கப்படவில்லை. வரிகளையும், அத்தியாவசிய பொருட்களின் விலைகளையும் அதிகரித்து தேசிய கையிறுப்பை அதிகரிக்க முடியும். அதேபோல் ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவு செய்யாமல், வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்யவும் முடியும்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒன்றுமில்லை. போலியான வாக்குறுதிகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. 2025 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்துங்கள். வடக்குக்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுங்கள். அதனை விடுத்து போலியான குற்றச்சாட்டுக்களையும், வாக்குறுதிகளையும் மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருக்காதீர்கள் - என்றார்.

## கொட்டாஞ்சேனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

7 இரவு கார் ஒன்றில் வருகைத் தந்திருந்த சந்தேகநபர்கள், வீதியில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

குற்றக்கும்பலைச் சேர்ந்த புஷ்பராஜ் என்ற பூகுடு கண்ணா என்பவரது நெருங்கிய ஆதரவாளரான 43 வயதுடைய அசேல புத்திக என்பரே சம்பவத்தில் உயிரிழந்தார். இவரது கொலைக்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் 6 சந்தேகநபர்கள் கொழும்பு குற்றப் பிரிவு அதிகாரிகளால் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய கார் சாரதி ஒருவர் மற்றும் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த கார் சாரதியே சம்பவத்தன்று துப்பாக்கிதாரி வருகை தந்திருந்த காரைச் செலுத்தியிருந்தார் என்று விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மேலும் துப்பாக்கிச்சூட்டின் பின்னர் துப்பாக்கிதாரி காரில் ஏறி, படுகாயமடைந்த நிலையில் வீதியில் விழுந்துக் கிடந்த நபர் மீது காரை ஏற்றி அங்கிருந்து தப்பிச்சென்றிருந்தமை அருகிலிருந்த மறைகாணிகளில் (சிசிரிவி) பதிவாகியிருந்தது.

கைதான பெண், கார் சாரதி மற்றும் துப்பாக்கித்தாரிக்குத் தங்குமிட வசதிகளை வழங்கியிருக்கிறார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைதான சந்தேகநபர் 27 வயதுடைய கொழும்பு 13 பகுதியைச் சேரந்தவராவதுடன்.

கைதான பெண் 32 வயதுடைய மஹரகம பகுதியைச் சேர்ந்தவராவார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைத்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

## 2026 வரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான கயந்த கருணாதிலக்க வாக்கெடுப்பைக் கோரியதையடுத்து சபாநாயகர் வாக்கெடுப்பு நடத்த கோரம் மணியை ஒலிக்க உத்தரவிட்டார்.

இலத்திரனியல் முறையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஆதரவாக அரசுடன் இணைந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி வாக்களித்த அதேவேளை எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி, செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அருச்சுனா ஆகியோர் வாக்களித்தனர் .

இதேவேளை, இந்த வாக்களிப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சபையில் இருந்த நிலையில் ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்காது ஒதுங்கியிருந்தது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் , கபீர் ஹாசிம் . தொழிலாளர்கட்சியின் தலைவர் காதர் மஸ்தான் ஆகியோர் உட்பட 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு வருகை தரவில்லை.

இதேவேளை, அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதம் இன்று சனிக்கிழமை தொடங்கி டிசெம்பர் 5 வரை நடைபெறும். அன்றையதினம் மாலை 6 மணிக்கு வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

## எதிர்க் கட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என குறிப்பிட்டார்.

என்றாலும் எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயங்களை தெரிவித்துக்கொண்டிருக்கையில், இதுதொடர்பில் விவாத்தில் தெரிவிக்கமுடியும் என தெரிவித்து, எதிர்க்கட்சித் தலைவரின் ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது.

## பெருந்தோட்டத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பை இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஆளும்தரப்பு முன்மொழிந்துள்ளது. இதில், சம்பந்தப்பட்ட தோட்ட நிறுவனம் .200 ரூபாவையும், ஆளும்தரப்பு 200 ரூபாவையும் செலுத்தும் தீர்மானத்திற்கு வந்துள்ளது. துயர் நிறைந்த வாழ்க்கையை நடத்தி வரும் பெருந்தோட்ட சமூகத்தினருக்கு, இந்த 400 ரூபா சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள எடுத்த தீர்மானம் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இந்தத் தொகையை மேலும் அதிகரிக்க வேண்டும். இதைவிட அதிக ஒதுக்கீடு இதற்காக மேற்கொள்ளப்பட வேண்டும்

பெருந்தோட்ட சமூகத்தினருக்கான சம்பளத்தை அதிகரிக்கும் விடயம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. பெருந்தோட்ட சமூகத்திற்குச் சம்பளம் கிடைத்தால், அது நல்ல விடயம். அவ்வாறே இது சாதகமான விடயமுமாக உள்ளது. ஆளும்தரப்பால் இவ்வாறு நிதிகளை ஒதுக்க முடியும். கொவிட்-19 தொற்றுநோய் ஏற்பட்ட சமயம், வீழ்ச்சி கண்ட தொழிற்றுறைகளில் பணிபுரிபவர்களின் சம்பளத்தை அதிகரிக்க ஐக்கிய இராச்சிய ஆளும்தரப்பு நிதியை ஒதுக்கீடு செய்தது . இவ்வாறு நிதிகளை ஒதுக்குவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதால் மாத்திரமல்லாது, பெருந்தோட்டத் துறையில் குறைந்த அளவில் பயன்படுத்தப்படும், முற்றுலுமே பயன்படுத்தப்படாத காணிகளில் பயிரிடுவதற்கான உரிமையை வழங்கி, அவர்களைச் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கான தேசிய வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு மேற்கொள்வதன் மூலம் பெருந்தோட்ட சமூகத்தை வலுப்படுத்த முடியும்.

இன்று, தோட்டத் துறையில் 60 - 70 சதவீத காணி உரிமைகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமானதாக காணப்பட்ட போதிலும், தேயிலை உற்பத்தியில் இத்தரப்பு 30 வீதத்தை விடவும் குறைவான பங்களிப்பை மாத்திரமே பெற்றுத் தருகிறது. மறுபுறம், 30 வீத காணி உரிமைகளை கொண்ட சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், நாட்டின் தேயிலை உற்பத்தியில் 60-70 வீதமான பங்களிப்பைப் பெற்றுத்தருகின்றனர். பயிரிடப்படாத காணிகள் அரசு மற்றும் கம்பனிகளிடம் காணப்படுவதால், இவற்றை வேலையில்லாத இளைஞர்களுக்கும், தோட்ட சமூகத்தினருக்கும் பிரித்து வழங்கி, அவர்களுக்குக் காணி உரிமைகளை வழங்கி, தேயிலை உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய முடியும். இது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

தொடர்ச்சி 3ம் பக்கம்....


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்னும் எத்தனை ஆண்டுகள்தான் ஆலோசனையே நடத்துவீர்கள்?

வடக்கு – கிழக்கு மக்களின் வாழ்வில் போரால் ஏற்பட்ட காயங்கள் இன்னும் ஆறவில்லை. அதில் மிகக் கடுமையான, நாள்தோறும் நினைவூட்டும் காயம்– ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள். வடக்கில் யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பகுதிகளில் தனியார் குடியிருப்பு மற்றும் விவசாய நிலங்கள் பெருமளவில் இன்னும் இராணுவப் பயன்பாட்டில் உள்ளன். சமீபத்தில் நாடாளுமன்ற வளாகத்தில் காணி விடுவிப்பு முன்னேற்றத்தைப் பரிசீலிக்கும் உயர்மட்டக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கலந்துரையாடலின் நோக்கம் நிச்சயமாக வரவேற்கத்தக்கது. ஆனால் கேள்வி போர் முடிந்து 15 ஆண்டுகள் கழிந்தும் நாம் இன்னும் கலந்துரையாடும் நிலையில்தானா இருக்கவேண்டும்? இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர இன்னும் எத்தனை ஆண்டுகள்தான் எடுப்பீர்கள்?

### முடிவில்லா நடைமுறை

கூட்டத்தில் படை முகாம்களின் எல்லை மறுசீரமைப்பு, இழப்பீடு வழங்கும் முறை, விடுவிக்கப்பட வேண்டிய காணிகளின் முன்னுரிமைப் பட்டியல், நிர்வாகத் தடைகள் போன்றவை குறித்து ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவை அனைத்தும் தொழில்நுட்ப ரீதியாக முக்கியமான அம்சங்கள்தான். ஆனால் இந்த விவாதங்கள் புதிதல்ல. கடந்த பல ஆண்டுகளாக ஆட்சிகள் மாறினாலும், அதே புள்ளிகள் மீதே ஆலோசனைகள் தொடர்கின்றன.

எல்லை மறுசீரமைப்பை 15 வருடங்களாகச் செய்ய முடியாவிட்டால், அதில் மக்கள் நம்பிக்கை வைப்பது எப்படி?

இழப்பீட்டு நடைமுறையில் வேகம் தேவை என்று ஒவ்வொரு ஆண்டும் தெரிவிக்கப்பட்டும், அது நடைமுறையில் காணப்படவில்லை.

நிர்வாகத் தடைகள் என்ற பெயரில் பல குடும்பங்கள் தங்கள் சொத்து உரிமையை நிரூபிக்க முடியாமல் தவிக்கின்றன.

இந்த நிலை தொடர்ந்தால், ஆலோசனைகள் ஒரு முடிவில்லா வட்டமாகவே மாறும் அபாயம் உண்டு.

### நீதியும் - பாதுகாப்புக்கும் ஒன்றல்ல

பாதுகாப்பு அடித்தளம் முக்கியம் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. நாட்டின் பாதுகாப்பு ஆபத்துக்கு உள்ளாகக்கூடாது என்று ஆளும்தரப்பு கவனமாக இருப்பது புரிகிறது. ஆனால் பாதுகாப்பு தேவைகளை காரணமாகக் காட்டி, தனியார் சொத்து உரிமைகளை முடிவில்லாமல் மறுப்பது நியாயமல்ல.

இந்தப் பிரச்சினை ஒரு பாதுகாப்புப் பிரச்சினை மட்டும் அல்ல;

இது ஒரு நீதிக்கான மனித உரிமைப் பிரச்சினையும்கூட. ஒரு வாழ்வாதாரமும் சார்ந்த கேள்வியும்கூட.

பல குடும்பங்கள் தங்கள் பூர்வீக நிலங்களை இழந்ததால், வீடு கட்ட முடியாமல், விவசாயம் செய்ய முடியாமல், தமது சந்ததிகளுக்குச் சொத்துக்களைப் பகிர்ந்தளிக்க முடியாமல், கடன் வசமாக வாழ்ந்து, வேலையின்றி அலைந்து வருகின்றன.

அவர்களிடம் ‘நாங்கள் இன்னும் ஆலோசிக்கிறோம்’ என்று 15 ஆண்டுகளாகக் கூறுவது மிகப் பெரிய அநீதியாகும்.

இழப்பீடு வழங்கும் செயல்முறை தற்போது மிகத் தேவையான ஒன்றாகும். ஆனால் இது நடைமுறை ரீதியாக மெதுவாக நகர்கிறது. காணி உரிமையாளர்கள் பலர் இன்னும் மதிப்பீட்டுத் தாமதம், ஆவணச் சரிபார்ப்பு, நிர்வாகச் சரிபார்ப்புக்கள் மூலம் முடிவற்ற காத்திருப்பில் உள்ளனர்.

உண்மையில், காணியைப் படையினர் ஆக்கிரமித்த காலத்தில் இருந்து அவற்றின் உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட வருமான இழப்புகளையும், குடியிருப்பு இழப்புகளையும், சமூக இடம்பெயர்வையும் கருத்தில் கொண்ட முழுமையான இழப்பீட்டு நடைமுறையே இந்த மக்களுக்கு வழங்கப்படவேண்டும். ஆனால், அது பற்றிய சிந்தனையே ஆளும்தரப்பிடம் இல்லை. குறைந்தபட்சம்காணிகளையாவதுவிடுவித்துஉரிமையாளர்களிடம் ஒப்படைக்கவேண்டாமா?

உயர்மட்டக் கூட்டத்தில் இந்த விடயத்தில் வெளிப்படைத்தன்மையும் சமத்துவமும் முக்கியம் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த வார்த்தைகள், மக்கள் அடைவதற்கான நம்பிக்கையாக மாற வேண்டும்.

காணி விடுவிப்பு ஒரு ஒழுங்கு மீட்டல் நடவடிக்கையாக அல்ல,

ஒரு மக்கள் நம்பிக்கை மீட்டல் நடவடிக்கையாக அரசால் நடத்தப்படவேண்டும்.

முன்னேற்ற அறிக்கைகள், காலக்கெடுகள், விடுவிக்கப்பட வேண்டிய பகுதிகளின் தெளிவான பட்டியல் ஆகியவை பொது மக்களுக்கு வெளிப்படையாக பகிரப்பட வேண்டும்.

போர் முடிந்து 15 ஆண்டுகள். பாதுகாப்பு சூழல் நிலைபெற்றது.

அரசுகள் மாறின. கூட்டங்கள் நடந்தன. அறிக்கைகள் எழுதப்பட்டன. ஆனால் மக்களின் காணிகள் இன்னும் திரும்பவில்லை.

இங்கு மக்கள் எதிர்பாரிப்பது மேலும் ஒரு ஆலோசனைக் கூட்டம் அல்ல – ஒரு முடிவு. அதுவும் காலக்கெடு உடனான நடைமுறையுடன் கூடிய முடிவு.

வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கையை மீண்டும் வழக்கத்திற்கு கொண்டுவர அரசின் உண்மையான அரசியல் விருப்பமே இப்போது மிகத் தேவையானது. 15 ஆண்டுகளாக நடத்தப்பட்ட ஆலோசனைகள் போதும். இனிக் காணிகள் மக்கள் கைகளுக்குத் திரும்பவேண்டும். அதற்கு உருப்படியான நடவடிக்கை எடுங்கள்.

# இலங்கைக்கான கடன் வசதியின் 5ஆவது மீளாய்வு சில வாரங்களில்

இலங்கைக்கான நீட்டிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் ஐந்தாவது மதிப்பாய்வை கருத்தில் கொள்ளும் வகையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு அடுத்த சில வாரங்களில் கூடவுள்ளதாக அதன் தொடர்பாடல் பணிப்பாளர் ஜூலி கோசெக் தெரிவித்துள்ளார்.

சர்வதேசநாணயநிதியத்தின்தலைமையகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர், கடந்த ஒக்டோபர் 9 இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்தின் ஐந்தாவது மதிப்பாய்வு தொடர்பில் பணியாளர்கள் மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கு இடையில் பணியாளர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இந்த இணக்கப்பாடு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், இலங்கைக்கு சுமார் 347 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவிக்கான அணுகல் கிடைக்கும். இதற்காக நிறைவேற்றுச் சபை அடுத்த சில வாரங்களில் கூடும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

2026 வரவு - செலவுத் திட்டம் சர்வதேச நாணயநிதியத்தின்திட்டத்தின்அளவுருக்களுடன் (ஹ்ீழிஷழிதுளமிளஷவி) இணங்குகிறதா என்பதைத் தீர்மானிக்க, எமது பணியாளர்கள், வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்ட ஆவணங்களை தற்போது ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்த மதிப்பீடு நிறைவேற்று சபையின் ஆய்வுக்குமிகவும்முக்கியமானது. இதுவும்அடுத்த சில வாரங்களுக்குள் நடக்கும். மறுசீரமைப்பை பொறுத்தவரையில், அவை இலங்கையின்திறனை மேலும் அதிகரிப்பதற்கு மிகவும் முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஜேவிபி செயலர் ரில்வினுடன் பிரிட்டிஷ் உயராணையர் சந்திப்பு

இலங்கைக்கான பிரித்தானிய உயராணையருக்கும் ஜேவிபியின் பொதுச் செயலாளருக்கும் இடையிலான சந்திப்பு இலங்கைக்கான பிரித்தானிய உயராணையர் அன்றூ பற்றிக் மற்றும் ஜேவிபியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று பத்தரமுல்ல, பெலவத்தையிலுள்ள ஜேவிபி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் நிகழ்கால அரசியல் நிலைமைகள் பற்றியும் பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவுகின்ற நீண்டகால நட்புறவு பற்றியும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன. குறிப்பாக, பிரித்தானியா எதிர்காலத்தில் இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்குமென்றும் தெரிவிக்கப்பட்டது

அதேவேளை, ஜேவிபியின் பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா இம்மாதம் 21 அன்று பிரித்தானியாவுக்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார். அது பற்றியும் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயராணையர் அலுவலகத்தின் அரசியல் பிரிவின் முதனிலைச் செயலாளர் டொம் சொப்பர், அரசியல் ஆலோசகர் இன்ஷாப் மாகர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியைப் பிரதிநிதித்துவம் செய்து சட்டத்தரணி தோழர் மது கல்பனா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# நெதர்லாந்து சுற்றுலாவியின் பணத்தை திருடியவர் கைது

கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவரின் 3 இலட்சத்துக்கும் அதிகமான பணத்தை திருடிய ஹோட்டல் ஊழியர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

11 நவம்பர் 2025 அன்று மாலை வேளையில் கோட்டை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் அறையில் தங்கியிருந்த நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவரின் பணப்பையிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளதாக நவம்பர் 13 கோட்டை பொலிஸ் நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கினர்.

குறித்த வெளிநாட்டுப் பெண் வேறு பெண்ணொருவருடன் குறித்த ஹோட்டலில் விசேட விருந்தினர்கள் தங்கும் பிரதான அறையில் தங்கிருந்த வேளையில், அவரின் பணப் பையிலிருந்த திர்ஹாம் மற்றும் யூரோ நாணயங்கள் (இலங்கை ரூபா மதிப்பின்படி 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா) பணம் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் சுற்றுலாப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து ஹோட்டல் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 41 வயதுடைய கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்தவர். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் சந்தேகநபர் தங்கும் அறையில் வெளிநாட்டுப் பெண்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் பணத்தை திருடியதாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். திருடிய வெளிநாட்டு நாணயத்தாள்களை ஜா-எல பிரதேசத்தில் அமைந்துள்ள நாணயம் மாற்றும் நிறுவனம் ஒன்றில் மாற்றினார் எனவும் தெரிவித்துள்ளார். சந்தேகநபர் தொடர்பில் கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வலி. தென் மேற்கில் கர்ப்பிணிகளுக்கு இலவச போசாக்குணவு

வலி தென் மேற்கு பிரதேச சபையால் கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசாக்குணவு வழங்கப்பட்டது.

2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டு நிதி மூலம் பொருளாதார ரீதியாக வசதி குறைந்த கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்குணவு வழங்கும் நிகழ்வானது நேற்று இடம்பெற்றது.

ஆனைக்கோட்டை,மானிப்பாய் உப அலுவலகங்களுக்குட்பட்ட பிரதேச பயனாளிகளுக்கு பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு.ப 10.00 மணிக்கு வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் தவிசாளர் சபையின் செயலாளர் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் பயனாளிகள் கலந்து கொண்டனர்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

காலைக்கதிர் Kalaikkathir

## ரூ. 200 சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறாம்நாள்விவாதத்தில்உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில்தான் ஆளும்தரப்பைப்பொறுப்பேற்றோம். நாட்டின் நிதி நிலைமையை உறுதிப்படுத்திக் கொண்டு 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசசேவையைவினைத்திறனாக்குவதற்கு டிஜிட்டல் மயப்படுத்தலுக்காக பல மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் சம்பள அதிகரிப்புக்கு 11 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்களுக்கான 200 ரூபா சம்பள அதிகரிப்பு பற்றி எதிர்க்கட்சியினர் மாறுப்பட்ட கருத்தைக் குறிப்பிடுகிறார்கள். அரச நிதியை மோசடி செய்து நாட்டை வங்குரோத்து நிலைக்குத்தள்ளியவர்கள்தான் பெருந்தோட்ட மக்களுக்கான சம்பள அதிகரிப்பை எதிர்க்கிறார்கள்.

குறிப்பிட்டதைப் போன்று பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பளத்தை வழங்குவோம். பெருந்தோட்ட மக்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் பிரதான பங்காளியாக உள்ளார்கள். அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றவாளிகள் கைது செய்யப்படும்போது அவர்களின் விவரங்களை ஊடகங்களுக்கு வெளியிடுவது குறித்து பொலிஸ்மா அதிபர் வெளியிட்ட சுற்றறிக்கை தொடர்பில் எதிர்க்கட்சியினர் மாறுபட்ட கருத்தை குறிப்பிடுகிறார்கள். விசாரணைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களை ஊடகங்களுக்கு வழங்க வேண்டாம் என்றே பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டிருந்தார்.

ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குவதை தடுக்க வேண்டிய தேவையோ அல்லது நோக்கமோ ஆளும்தரப்புக்குக் கிடையாது.

டிசெம்பர் 21 ஆளும்தரப்பை வீழ்த்தும் போராட்டத்தில்ஈடுபடுவதாகக்குறிப்பிட்டவர்கள் தற்போதுமக்களுக்குவழங்கியவாக்குறுதிகளை நினைவுப்படுத்தவே போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்று குறிப்பிடுகிறார்கள். ஆளும்தரப்புக்கு எதிரான போராட்டம் எதிர்க்கட்சியினருக்கே எதிரானதாக அமையும் - என்றார்.

## சர்ச்சைக்குரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் தொடர்பில் கூறும்போது எனது பெயர் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது. அவை எனது வீட்டில் இருப்பது போன்றுதான் "அருச்சுனாவின் கொள்கலன்கள்" என்று குறிப்பிடுகிறார்கள். இதனால் இது தொடர்பில் எனக்கு இங்கே சில விடயங்களைக் கூறவேண்டியுள்ளது.

உண்மையில் இந்தக் கொள்கலன்கள் பிமல் ரத்நாயக்க துறைமுக அமைச்சராக இருக்கும்போது விடுவிக்கப்பட்ட கொள்கலன்களே. நான் இந்த சபையில் கூறிய விடயங்கள் தொடர்பில் சி.ஐ.டி.க்கு அழைக்கப்பட்டு நான் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டேன்.

இதேவேளை நான் ஒருமாத காலமாக ஐரோப்பிய பயணமொன்று சென்றிருந்தேன். அப்போது 323 கொள்கலன்களில் ஆயுதங்கள் இருந்ததாக எனக்கு முக்கிய ஆவணங்கள் கிடைத்துள்ளன. இப்போதும்நான்பொறுப்புடன் கூறுகின்றேன்.

விடுவிக்கப்பட்ட அந்த சர்ச்சைக்குரிய கொள்கலன்களுக்குள் ஆயுதங்களே இருந்தன. வேண்டுமென்றால் என்னை குற்றப்புலனாய்வு பிரிவுக்கு மட்டுமல்ல இன்டபோலுக்கு கொண்டுசென்றாவது கேளுங்கள். நான் பதிலளிக்கின்றேன். அது தொடர்பில் குழுவொன்றை அமையுங்கள். பயமின்றிகூறுகின்றேன். அதில் ஆயுதங்களே இருந்தன - என்றார்.

## பெருந்தோட்டத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய 1350 ரூபா சம்பளத்துடன் 400 ரூபா அதிகரித்து வழங்கப்படுவதை நான் எதிர்க்கவில்லை. எதிர்க்கப்போவதுமில்லை. பெருந்தோட்ட நிறுவனங்களால் 400 ரூபா செயல்படுத்தப்படுவதே விரும்பத்தக்கது.

பயிரிடப்படாத, பயன்படுத்தப்படாத தரிசுக் காணிகளை இந்த மக்களுக்குப் பெற்றுக் கொடுத்து, செய்கைகளுக்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுங்கள், இவ்வாறு செய்தால், தமது சொந்தக் காணியில், அவர்களுக்கென சொந்த வீட்டைக் கட்டிக்கொள்ள முடியும். ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் நிலைப்பாடும் இதுவே. இது, அரசுத்தலைவர் தேர்தல்கள் கொள்கை அறிக்கையில் நாம் முன்வைத்த கொள்கையாகும். இது தொடர்பான ஏனைய கருத்துக்களை புறம்தள்ளி வைத்து விட்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் இந்த உண்மையான கொள்கையை சமூகமயப்படுத்துவது நமது கடமை.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையிலேனும் நாடாளுமன்றத்தில் விசேட கருத்தை முன்வைக்க இன்று (வெள்ளிக்கிழமை) எனக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இந்த நிலைக்கு நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க இந்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2025இல் வெளியிடப்பெற்றது